# <u>செய்தி வெளியீடு</u>

**செய்தி வெளியீடு எண்.76/2022** **நாள் : 29.11.2022**

**சென்னை குடிநீர் வாரிய ஓய்வூதியதாரர்கள் நடப்பாண்டிற்கான (2022–23) உயிர்ச் சான்றிதழை டிசம்பர் மாதம் 12–ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.**

## <u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>

சென்னை குடிநீர் வாரிய ஓய்வூதியதாரர்கள் நடப்பாண்டிற்கான (2022–23) உயிர்ச் சான்றிதழை டிசம்பர் மாதம் 12–ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. சென்னை குடிநீர் வாரியத்தில் 5 ஆயிரத்து 878 ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் முதல் செப்டம்பர் மாதத்திற்குள் ஓய்வூதியதாரர்கள் உயிர்ச் சான்றிதழ் சமர்ப்பித்து வருவது நடைமுறையில் உள்ளது.நடப்பாண்டில் (2022-23) 5 ஆயிரத்து 326 ஓய்வூதியதாரர்கள் உயிர்ச் சான்றிதழை அளித்துள்ளனர். 552 ஓய்வூதியதாரர்கள் இன்றுவரை உயிர்ச் சான்றிதழ் அளிக்கவில்லை.

எனவே, உயிர்ச் சான்றிதழ் சமர்ப்பிக்காத சென்னை குடிநீர் வாரிய ஓய்வூதியதாரர்கள் **டிசம்பர் மாதம்** 12-**ம் தேதிக்குள்** சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், ஓய்வூதியதாரர்கள், **எண்.**75, **சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி நகர், சென்னை**-28 என்ற முகவரியில் இயங்கும் தலைமை அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ, அரசு இ-சேவை மையம் மூலமாகவோ மற்றும் ஜீவன் பிரமான் செயலி (Jeevan Pramaan portal) மூலமாகவோ தங்கள் உயிர்ச் சான்றிதழை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறது. தவறும் பட்சத்தில் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் தங்களின் ஓய்வூதியம் நிறுத்தப்படும் என தெரிவித்துக்கொள்கிறது.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்